**DEPOSITION OF WITNESS**

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.55/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | **P.W.1** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிகண்டன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | தங்கவேல் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.03.2025.

**311 குவிமுசமனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:55**

1. எங்கு குடியிருக்கிறிர்கள் என்றால் பெரிய கோடடை பிரிவு உடுமலை ஜே ஜே நகரில். நான் என் என்ன வேலை என்றால் பெயிண்டிங் வேலை. நான் தினமும் பெயிண்டிங் வேலைக்கு சென்று வருவேனா என்றால் சென்று வருவேன். நான் தினமும் பெயிண்டிங் வேலைக்கு எல்லா ஊருக்கும் சென்று வருவேனா என்றால் சென்று வருவேன். பெயிண்டிங் வேலை சென்று எப்பொழுது வருவீர்கள் என்றால் காலை 6 மணிக்கு சென்று மாலை 7 மணி வரை வேலை இருக்கும். விபத்தில் அடிபட்டவர் எனது அப்பா என்றால் சரிதான்.
2. நானும் எனது தகப்பனாரும் ஒரே குடும்பமாக இருக்கிறோம் என்றால் சரிதான். ஒரே குடும்பமாக ஜே ஜே நகரில் இருக்கிறோம் என்றால் சரிதான். என் தகப்பனார் என்ன வேலை செய்து வருகிறார் என்றால் வீட்டில் தான் இருக்கிறார் எந்த வேலைக்கும் செல்வதில்லை என்றால் சரிதான். என் தம்பி இருக்கு எப்பொழுது விபத்து ஏற்பட்டது என்றால் 23.12.2011 மாலை 6:00 மணி இருக்கு விபத்து ஏற்பட்டது. அடிபட்டதாக சொன்னதால் நான் சென்று பார்த்தேன் என்றால்

சரிதான்.

3. சம்பவம் நடந்ததை நான் எங்கிருந்து பார்த்தேன் என்றால் நான் சம்பவம் நடந்த அன்று ஐயப்பா பேக்கரியில் இருந்தேன் சம்பவம் நடந்தது என்று எனக்கு சொன்னார்கள், அதை கேட்ட நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்த பொழுது எனது அப்பா ரத்த காயத்தோடு கீழே இருந்தார். விபத்து ஏற்பட்ட பொழுது நான் ஐயப்ப பேக்கரையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் ஐயப்பா பேக்கரியில் ஆறு மணிக்கு இருந்தேன் என்றால் சரிதான். என் அப்பா எங்கிருந்து எங்கு வந்தார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விசாரித்து தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு என்ன வயது இருக்கும் என்று 72 வயது ஆகும்.
4. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு கிழமேல் ரோடு அகலமான ரோடு என்றால் சரிதான். அந்த சாலையில் இரண்டு பேருந்துகள் செல்லலாம் என்றால் சரிதான். எனது தந்தை இருக்கு விபத்து ஏற்பட்டதற்காக நஷ்ட ஈடு கேட்டு ஏதேனும் வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் உடுமலைப்பேட்டை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன். எனது தந்தை பேருந்தில் அடிப்படை வில்லை என்றாலும் அவர் பேருந்தின் முன்பு தாமாக விழுந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றாலும் சரியல்ல. பேருந்து மோதி விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.
5. நஷ்ட ஈடு பெறுவதற்காக வேண்டி எனது தந்தை பஸ்ஸில் மோதி விபத்து ஏற்பட்டதாக தற்போது பொய்யாக வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் அவராக விழவில்லை. அது பற்றி எனக்கு நேரடியாக விவரம் தெரியாது என்றால் அங்கு நேரடியாக பார்த்தவர்கள் சொன்னார்கள். பேருந்து ஓட்டுனரின் அஜாக்கிரதையினால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு எதிரி காரணம் அல்ல என்றாலும் எனது தந்தை வயதாகி கண் பார்வை சரி இல்லாததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.